# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,567 — 1965 නොවැම්බර් 24 වැනි බදාදා — 1965.11.24**

14,567 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

*[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]*

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி. 403 — உப உணவுப்பொருட்கள்.

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு), விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவு), விலைக்கட்டுப்பாட்டதிகாரி பின்னதுவகே ஆதர் சில்வா ஆகிய யான இக்கட்டளையால்—

(1) 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ந் தேதி வெளியான 14,559 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ந் தேதியைக்கொண்ட சி 402 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும் மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விற்றலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒருபொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒருபொருளை ஒருமொத்த அந்தரைக்கொண்டதொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒருபொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறுதொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப்பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப்பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக “இறுத்தல்” அல்லது “இரு” என்பது அவோர்டுபோய் எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ந் திகதியன்று கொழும்பில் பிற்பகல் 3 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

பி. ஆ. சில்வா,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்குமதி விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இறுத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெண்காயம் (சிக்பெலாபூர் சிறு வெண்காயம் நீங்கிந்த ஏனைய எல்லா ரகமும்) .. .. | 27 0 | 28 0 | 0 30 |
| கொத்தமல்லி .. .. .. | 47 0 | 48 50 | 0 52 |
| முழு உழுந்து .. .. .. | 44 0 | 45 25 | 0 46 |
| பாசிப்பயறு .. .. .. | 39 50 | 40 75 | 0 41 |
| துவரம்பருப்பு .. .. .. | 47 75 | 49 0 | 0 50 |
| கடலைப்பருப்பு .. .. .. | 46 25 | 47 50 | 0 48 |
| புளி .. .. .. | 42 0 | 44 0 | 0 50 |
| உருளைக்கிழங்கு .. .. .. | 24 0 | 25 0 | 0 27 |
| சிறு வெண்காயம் .. .. .. | — | 24 0 | 0 28 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையையுடைய ஒரு விற்பனையைக் குறிப்பதாகும்.

11-1235

---

உணவுவிலைக் கட்டளை : மட் /2/65

**சுத்தப்படுத்திய வெள்ளைச் சீனி.**

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்துப்பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) பீதாம்பரம் காசிலிங்கம் ஆகிய நான் இக்கட்டளையால்,

(1) 1963 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8 ந் திகதி வெளியான 13,556 இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரமான 1963 ம் ஆண்டு பங்குனி மாதம் 2 ந் திகதியைக் கொண்ட மட்/3/63 இலக்க விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் உள்ள விலைகளையே சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாக முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட இடங்களுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக விற்கப்படாதென உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் உள்ள விலைகளை சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட இடங்களுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக விற்கக் கூடாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) சீனி ஒரு அந்தர் அல்லது அதிற்கூடிய தொகையை ஒருதடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்,

(ஆ) சீனி ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்பிற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகுமென ஆக்ஞையிடுகிறேன்.

(இ) " சீனி " (சுத்தமாக்கப்பட்டது) எவ்வித கருப்பட்டி கலப்பில்லாதிருத்தல் வேண்டும்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் எவராவது சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனியை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ் வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் சுத்தப்படுத்தப்பட்ட வெள்ளைச்சீனியையும், இக்கட்டளையால் சுத்தப்படுத்தப்பட்ட வெள்ளைச்சீனிக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையையும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப் பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இறுத்தல்" அல்லது "இறு" என்பது அவோர்டுபோல் முறையின் பிரமாண இறுத்தல் முறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்:—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்ற சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனிக்குக் கொடுக்கப்பட்ட விலை,

(இ) விற்ற பொருளின் தொகை (நிறையில்),

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1965 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18 ந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மட்டக்களப்பு கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

பி. காசிலிங்கம்,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மட்டக்களப்பு மாவட்டம்.

முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை, சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி<br>ரூ. ச. |
|---|---|
| மட்டக்களப்பு–மண்முனை வடக்கு, மண்முனை மேற்கு காரியாதிகாரியின் பிரிவுகள் .. .. .. | 74 00 |
| ஏறாவூர்ப்பற்று காரியாதிகாரியின் பிரிவு .. .. .. .. .. | 73 92 |
| கோறளைப்பற்று காரியாதிகாரியின் பிரிவு .. .. .. .. .. | 73 81 |
| மண்முனை தெற்கு எருவில்போரைதீவு காரியாதிகாரியின் பிரிவு .. .. .. .. | 74 16 |

இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>நிகர இறாத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|
| மண்முனை வடக்கு காரியாதிகாரிப்பிரிவு .. .. .. .. .. | 0 69 |
| மண்முனை மேற்கு காரியாதிகாரிப்பிரிவு .. .. .. .. .. | 0 69 |
| ஏறாவூர்ப்பற்று காரியாதிகாரிப்பிரிவு .. .. .. .. .. | 0 69 |
| கோறளைப்பற்று காரியாதிகாரிப்பிரிவு | |
| (அ) கோறளைப்பற்று காரியாதிகாரிப் பகுதியில் கோறளை வடக்கு கிராமச் சங்கப்பகுதி, கள்ளிச்சை, பேரிலாவெளி, கிராமவிதானைப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் .. .. .. .. | 0 68½ |
| (ஆ) கோறளை வடக்கு, கிராமச்சங்கப் பகுதி, கள்ளிச்சை, பேரிலாவெளி கிராமவிதானைப் பகுதிகள் .. | 0 69 |
| மண்முனை தெற்கு எருவில் போரை தீவுக் காரியாதிகாரிப்பிரிவு .. .. .. | 0 69 |

குறிப்பு— இவ்விலைகள் மேலே குறிக்கப்பட்ட பொருட்களை விற்கவேண்டிய விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அவைகளை விற்கலாகாது.

3II–1131

இலங்கை, வாழைச்சேனை எம்போர்ட் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.